**கவனிக்க.**- *2009.03.27 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1596 - 2009 අප්‍රේල් මස 03 වැනි සිකුරාදා - 2009.04.03**

*1596 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 395 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வராராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2009, ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி புதன்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, மாச்சு மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## தொழில்நுட்பவியல் நிறுவனம் - மொறட்டுவைப் பல்கலைக்கழகம்

*தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமா கற்கைநெறிக்கான அனுமதி – 2009/2010*

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின், தொழில்நுட்பவியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் மூன்று வருடகால முழுநேர தொழில் நுட்பவியல் டிப்ளோமா கற்கை நெறிக்குத் தெரிவுசெய்வதற்காக தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. இக்கற்கைநெறியானது, தொழில்நுட்பவியல் நிறுவனத்திற் கான புதிய நிலையங்களில் நடத்தப்படும்வரை, மொறட்டுவைப் பல்கலைக்கழகக் கட்டிட நிலையங்களிலேயே நடாத்தப்படும்.

1. **பொது**.- இரண்டு வருட முழு நேர கற்றலையும், ஒரு வருட தொழிற்பயிற்சி யையும் உள்ளடக்கிய இத்தொழில்நுட்பவியற் தேசிய டிப்ளோமா கற்கைநெறியானது ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படுகின்றது. பின்வரும் கற்கைத்துறைகளில் கற்கைநெறிகள் வழங்கப்படுகின்றது :-

(அ) கப்பற்றுறை கல்வியும் தொழில்நுட்பவியலும் (வகை 1)

(i) கடல்சார் எந்திரவியற் தொழில்நுட்பவியல் ;
(ii) கப்பற்றுறை கல்வியும் தொழில்நுட்பவியலும் ;

(ஆ) ஏனைய தெரிவுகள் (வகை 2)

(i) இரசாயன எந்திரவியற் தொழில்நுட்பவியல் ;
(iii) குடிசார் எந்திரவியற் தொழில்நுட்பவியல் ;
(iii) மின்சார எந்திரவியற் தொழில்நுட்பவியல் ;
(iv) இலத்திரன் தொலைத்தொடர்பு எந்திரவியற் தொழில்நுட்ப வியல் ;
(v) பொறிமுறை எந்திரவியற் தொழில்நுட்பவியல் ;
(vi) பல்பகுதிய (பொலிமர்) தொழில்நுட்பவியல் ;
(vii) புடவை மற்றும் ஆடைத் தொழில்நுட்பவியல்.

2. **தகைமைகள்** :

2.1 ***வயது மற்றும் பிற தகைமைகள்***.- (அ) விண்ணப்பதாரிகள், 31.12.2008 ஆந் திகதியன்று 24 வயதிற்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

(ஆ) 31.12.2008 இல் 20 வயதிற்கு குறைந்த விண்ணப்பதாரர்களுக்கு கப்பற்றுறைக் கல்வித் தொழில்நுட்வியல், கடல்சார் எந்திரவியற் தொழில்நுட்பவியல், பாடநெறிகளுக்கான அனுமதிக்கு முன்னுரிமை வழங்கப்படும். கப்பற்துறை கல்வியும் தொழில்நுட்பவியலும் (வகை 1) இற்கான விண்ணப்பதாரிகள் மருத்துவ பரிசோதனை மற்றும் நேர்முகப் பரீட்சை என்பனவற்றுக்கு விசேடமாக தோற்றுதல் வேண்டும்.

(இ) ஏதாவது பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக் கழகம் தவிர்ந்த) உயர் கல்வி அமைச்சின் கீழ்வரும் உயர் கல்வி நிறுவனத்திலோ முழுநேர கற்கைநெறிக்கு பதிவுசெய்து கொண்டுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள் ஆவர்.

2.2 ***கல்வித் தகைமை***.- விண்ணப்பதாரிகள் இலங்கை பரீட்சைகள் ஆணையாளரினால் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் கீழ்குறிப்பிட்டுள்ள பாடங்களில் மூன்றிற்கு (03) குறையாமல் சித்திபெற்றிருத்தல் வேண்டும் :-

(i) இணைந்த கணிதம்
(ii) உயர் கணிதம்
(iii) பௌதிகவியல்
(iv) இரசாயனவியல்

இலங்கை பரீட்சைகள் ஆணையாளரினால் 2006 அல்லது 2007 அல்லது 2008 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சைகளில் ஒன்றில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

3. **தெரிவுசெய்வதற்கான தகைமைகள்** :

3.1 *கற்கைக்கான அனுமதி*.- அனுமதிக்கான தெரிவானது க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பெற்ற பெறுபேற்றின் அடிப்படையிலும், மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் நிறுவனத்தினரால் நடாத்தவிருக்கும் தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைவதிலும் தங்கியிருக்கும். தகுதிகாண் பரீட்சையில் சித்தி எய்தியவர்களில், க. பொ. த. (உ. த.) பரீட்சையில் அதிகூடிய பெறுபேற்றையுடையவர்கள், திறமை வரிசையில் தெரிவு செய்யப்படுவர். அதாவது இசற் மதிப்பீட்டு முறை (Z-Score) என்பதை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்யப்படுவர். 40% திறமையின் அடிப்படையிலும் 60% மாவட்ட ஒதுக்கீடு அடிப்படையிலும் தெரிவு நடைபெறும்.

3.2 *கற்கைத் துறை*.- கற்கைத் துறைகளுக்கு மாணவர்களைத் தெரிவுசெய்கையில், தகுதிகாண் பெறுபேறையும் தந்துள்ள கற்கைத்துறை விருப்பு வரிசையையும் சேர்த்துக் கருத்திற்கொள்ளப்படும்.

4. **விண்ணப்பிக்கும் முறை** :

4.1 (i) *விண்ணப்பப்படிவம் :*
மாதிரி விண்ணப்பப்படிவத்தினையும், தகவல்களையும் அரச வர்த்தமானியில் அல்லது பின்வரும் இணைய முகவரியில் பெற்றுக்கொள்ளலாம் :

http://www.mrt.ac.lk/itum

(ii) விண்ணப்பப்படிவமானது, கடித உறையின் இடது மேல் மூலையில் "NDT Admission 2009/ 2010" என ஆங்கிலத்தில் குறிக்கப்பட்டு, "பிரதிப் பதிவாளர், தொழில்நுட்பவியல் நிறுவனம், மொறட்டுவை பல்கலைக்கழகம், கட்டுப்பெத்த, மொறட்டுவை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

(iii) விண்ணப்பப்படிவமானது விண்ணப்ப முடிவுத் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ பிரதிப் பதிவாளர் தொழில்நுட்பவியல் நிறுவனம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு வந்தடைதல் வேண்டும்.

(iv) முத்திரை ஒட்டிய இரண்டு 9" x 4" அளவிலான கடித உறையில், (பெறுமதி 40 ரூபா) உங்களது விலாசத்தை எழுதி விண்ணப்பத்துடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

(v) விண்ணப்பங்கள் பூர்த்தியாக்கப்பட்டு, விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டவாறு உள்ளடக்கப்பட்டவை உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். மூல அல்லது பிரதி ஆவணங்கள் தேவையில்லை (விண்ணப் பப்படிவத்தில் 3, 4 மற்றும் 5 ஆம் பந்திகளைப் பார்க்க.)

4.2 கற்கை நெறிக்கான முன்னுரிமை :

(i) இரண்டு வகையான கற்கை நெறிகள் உள்ளன.

(ii) விண்ணப்பதாரிகள் கப்பற்றுறைசார் கற்கை நெறி (வகை 1/SET 1) அல்லது ஏனைய கற்கை நெறி (வகை 2 /SET 2) அல்லது இரண்டிற்குமோ விண்ணப்பிக்க லாம். இரண்டிற்கும் விண்ணப்பிக்கு மிடத்து உங்கள் விருப்பு வரிசையை தெரியப்படுத்தல் வேண்டும்.

(iii) 'வகை 1' இல் முதலாவது விருப்பினை 1 எனவும் இரண்டாவது விருப்பினை 2 எனவும் குறிப்பிடுக. கப்பற்றுறை சார் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களால் மாத்திரம் நிரப்பப்படல் வேண்டும்.

(iv) 'வகை 2' இல் முதலாவது விருப்பினை 1 எனவும் இரண்டாவது விருப்பினை 2 என்றவாறு உங்கள் விருப்புகளை (1, 2, 3, 4, 5, 6, 7) என குறிப்பிடுக.

5. (i) **விண்ணப்பக் கட்டணம்.**- ஏதாவதொரு இலங்கை வங்கிக் கிளையில் மட்டும், 'ஏதாவதொரு வகை' க்கான கற்கைநெறிக்கு ரூ. 300 (முந்நூறு ரூபா) உம் 'வகை 1' க்கான கப்பற்றுறைக்கும், 'வகை 2' க்கான ஏனைய துறைகளுக்கும் சேர்த்து விண்ணப்பிக்க விரும்பினால் ரூ. 500 (ஐநூறு ரூபா) உம் "தொழில்நுட்பவியல் நிறுவனம், மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் இலங்கை வங்கி, கட்டுபெத்தை கிளையில் உள்ள கணக்கு இல. 0000308280" க்கு செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்கவும். விண்ணப்பக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்படமாட்டாது.

(ii) விண்ணப்ப முடிவுத் திகதி.- விண்ணப்ப முடிவுத் திகதி 2009, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதியாகும். (30.04.2009)

6. **தகுதிகாண் பரீட்சை.**- ஒவ்வொரு மாவட்டத்திலும், அம்மாவட்டத்திற்குரிய க. பொ. த. (உ. த.) பரீட்சைப் பெறுபேற்றுக்கமைய நிரல்படுத்தப்பட்டு அதிகூடிய பெறுபேற்றையுடைய விண்ணப்பதாரி களே தகுதிகாண் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இப்பரீட்சை தொழில்நுட்பவியல் நிறுவனம், மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும்.

7. **பதிவு செய்தல்.**- (i) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் கற்கைநெறிக்குப் பதிவுசெய்வதற்காக பின்வரும் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் :-

* க. பொ. த. (உ. த.) சான்றிதழ் ;
* க. பொ. த. (உ. த.) இசற் மதிப்பீடு (Z Score) ;
* பாடசாலை விலகற் சான்றிதழ் ;
* பிறப்புச் சான்றிதழ் பத்திரம்/சான்றிதழ்களில் பெயர் மாற்றம் ஏதும் இருப்பின், சத்தியக்கூற்று இணைக்கப்பட வேண்டும்.

8. **கவனிக்க.**- (i) ஒரு பரீட்சார்த்தி தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கைநெறிக்குப் பதிவுசெய்யப்பட்டதும் அக்கற்கைநெறிக் காலத்தின்போது இந்த பல்கலைக்கழகத்திலோ இலங்கையின் வேறு எந்தப் பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) உயர் கல்வி அமைச்சின் கீழ் வரும் எந்த ஒரு நிறுவனத்திலோ வேறு எந்த கற்கை நெறியையும் பயில்வதற்கு அனுமதி பெறுவதற்குத் தகுதியற்றவராவார்.

(ii) ஏதாவது பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) உயர் கல்வி அமைச்சின்கீழ் வரும் உயர் கல்வி நிறுவனத்திலோ பதிவுசெய்து கொண்டுள்ள முழுநேர மாணவர்கள் தேசிய தொழில்நுட்பவியல் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கவோ பதிவுசெய்துகொள்ளவோ தகுதியற்றவர்கள் ஆவர்.

பணிப்பாளர்.

தொழில்நுட்பவியல் நிறுவனம்,
மொறட்டுவைப் பல்கலைக்கழகம்,
2009.03.16.

SPECIMEN APPLICATION FORM

**Application For Admission to the National Diploma in Technology Course – Academic Year 2009/2010**

INSTITUTE OF TECHNOLOGY, UNIVERSITY OF MORATUWA

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | *For office use only* | | | | |
| | Application No. | | | | |
| | District | | | | |

Application For Please tick ( ✓)

(a) Maritime Fields - (SET 1) ☐

(b) Other Fields - (SET 2) ☐

[Applicants may apply for single set (Set 1 or Set 2) or both sets (Set 01 and Set 02)]

01. Personal Details (Please Use **BLOCK CAPITALS**)

Name in Full :

(Leave one blank cage between names)

Name with Initials :

(Leave one blank cage between names)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Title | Mr./Ms. | | Sex | Male/Female | | |
| Age | (Years) | (Months) | Date of Birth | | | |
| As at 31st Dec. 2008 | | | | Date | Month | Year |
| National ID Number | | | | | | |

02. Contact Details

Address (Residence):

(Leave one blank cage between different segments of the address)

Telephone

Mobile

E-mail (if available)

03. Results of G. C. E. (Advanced Level) Examination :

| *Subjects & Details of Examination* | *Grades & Details obtained at the* | | |
|---|---|---|---|
| | *1st attempt* | *2nd attempt* | *3rd attempt* |
| Year | | | |
| Physics | | | |
| Chemistry | | | |
| Combined Mathematics | | | |
| Advanced Mathematics | | | |
| Index Number | | | |
| Z-Score | . | . | . |
| Medium | Sinhala/Tamil/English (Delete whatever is inapplicable) | | |

Results of the year to be considered for Selection (indicate whether 2006 or 2007 or 2008)

04. School(s) attended from Year 11 to 13

| *Year* | *Name & Address of School* | *District* | *Period of Attendance* | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | *From* | | | *To* | | |
| | | | *Y* | *M* | *D* | *Y* | *M* | *D* |
| 11 | | | | | | | | |
| 12 | | | | | | | | |
| 13 | | | | | | | | |
| 1st Attempt | | | | | | | | |
| 2nd Attempt | | | | | | | | |
| 3rd Attempt | | | | | | | | |

05. Certification of Results and School attended :

It is compulsory to certify the Results under No. 03 and Details under No. 04 in the application by the School Principal for the School Candidates, and by a Justice of Peace for External Candidates.

I certify that the particulars given above by the candidate in the cage No.3 and 4 are true and accurate according to the Original Certificates.

Name of the Principal/Justice of the Peace : (Rev./Dr./Mr./Mrs.) ..................................................................................

Official Seal

......................., .....................
Signature Date

06. Field Preference :

*Set 1* - Insert order of preference as 1 for First preference and 2 for Second preference. This should be completed only by the candidates who have applied for Maritime Studies.

*Set 2*- Insert order of preference as 1, 2, 3, 4, 5, 6, 7. '1' for the "Most Preferred", '2' for the next and so on,'7' for the last preferred.

| *Set 1* | |
|---|---|
| *Maritime Fields* | *Order* |
| Marine Engineering Technology | |
| Nautical Studies and Technology | |

| *Set 2* | |
|---|---|
| *Other Fields* | *Order* |
| Chemical Engineering Technology | |
| Civil Engineering Technology | |
| Electrical Engineering Technology | |
| Mechanical Engineering Technology | |
| Polymer Technology) | |
| Textile & Clothing Technology | |

| State Priority, if applied for both sets Please tick (✓) | |
|---|---|
| SET 1 | |
| SET 2 | |

| Are you registered as a fulltime student in any other University under the UGC (other than Open University) or any other Higher Educational Institution under the Ministry of Education ? (Delete whatever is inapplicable) | *Yes* | *No.* |
|---|---|---|

Applicant's Declaration :

(1) I declare that I am not a fulltime registered student at any University (except Open University of Sri Lanka) or any Higher Educational Institution under the Ministry of Education.

(2) I certify that all the particulars given by me in this Application are true and accurate. I am aware that if the particulars given by me in this Application are found to be false or inaccurate prior to my admission I will be discontinued from the course.

(3) In the event of my being selected for admission after the Test, I shall abide by the Statutes, By-Laws, Regulations

and Rules of the Institute of Technology, University of Moratuwa, in so far as they are applicable to me.

(4) I have pasted the Cash deposit/ Cash transfer receipt obtained from Bank of Ceylon, drawn in favour of "Institute of Technology, University of Moratuwa - Account No. 0000308280 of Bank of Ceylon, Katubedde Branch".

(5) I also enclose a self-addressed stamped envelope (Rs. 40 worth) in size 9" x 4".

(6) I am aware that if I am found to be registered in another University or any other Higher Educational Institution under the Ministry of Education at the time of sitting for the Aptitude Test for the National Diploma in Technology Course, I will not be selected for the Course.

----,
Signature of Applicant.

Date :-----.

| Paste your Cash Deposit/Cash Transfer Original Slip here. |
| --- |

4-47

---

**மத்திய அரசாங்கத்தின் கீழ் தேசிய பாடசாலைகளுக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட முகாமைத்துவ உதவியாளர் பதவி வகிப்பவர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடை தாண்டற் பரீட்சை - 2009**

இப்பதவிக்குரிய உத்தியோகத்தர்களுக்காக உரிய அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு ஒழுங்கு விதிகளுக்கமைய வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் 2009, யூலை மாதம் நடத்தப்படும் என இத்தால் அறிவிக்கிறேன்.

2. (I) இப்பரீட்சை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக அவரினால் உத்தரவிடப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்பட வேண்டும் ;

(II) பரீட்சார்த்திகளுக்கு விதிக்கப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகள் வர்த்தமானி அறிவித்தலில் தனியாக அச்சிடப்பட்டுள்ளன. இச்சட்ட ஒழுங்குகளை மீறும் பட்சத்தில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு உட்பட வேண்டியேற்படும் ;

(III) இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்க முடிவது மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ள தேசிய பாடசாலைகளுக்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட முகாமைத்துவ உதவியாளர் பதவியை வகிப்போர் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும் ;

(IV) இவ்வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்குரிய 02 பாடங்களை ஒரு தடவையில் அல்லது 02 தடவைகள் தோற்றி சித்தியடைய முடியும்.

3. **பரீட்சைக் கட்டணம்.**-இவ்வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்காக முதற் தடவையாக தோற்றும் விண்ணப்பதாரர்களிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. அதற்குப்பின்னர் தோற்றுவதாயின் ரூ. 250 பரீட்சைக் கட்டணம் அறவிடப்படும். (ஒரு பாடமாக இருப்பின் ரூ. 125) இப்பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 4000-20-03-20-13 இல் வைப்பிலிடக்கூடியவாறு நாட்டின் எந்த மாவட்ட/ பிரதேச செயலகத்திலும் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தின் உரிய இடத்தில் கழறாது ஒட்ட வேண்டும்.

(பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியை உங்களுடன் வைத்திருப்பது பயன்மிக்கது)

4. **விண்ணப்பப் படிவம்.**-விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக இருக்க வேண்டும். இம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய ஏ4 அளவு கடதாசியில் தயாரிக்கவேண்டியதுடன் தலைப்பு இலக்கம் 1-3 வரை முதலாம் பக்கத்திலும் எஞ்சியதை இரண்டாம் பக்கத்திலுமாக தயாரிக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தை தட்டச்சுப் பொறித்து தயாரிக்க முடியும் என்ற போதிலும் அதனை சரியாக தெளிவாக விண்ணப்பதாரியின் கையெழுத்தினால் பூரணப்படுத்த வேண்டும். இதனடிப்படையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் விண்ணப்பதாரியினால் வலயக் கல்விப் பணிப்பாளர் /திணைக்களப் பொறுப்பாளரினால் 2009, ஏப்பிறல் 30 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "பத்தரமுல்லை, பெலவத்தை, பரீட்சை ஆணையாளர் நாயகம்" இற்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவங்களை அனுப்பும்போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் நியமனக் கடிதத்தின் உறுதிசெய்யப்பட்ட பிரதியை இணைக்க வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்களும் சரியான தகவல்களைக் குறிப்பிடாத விண்ணப்பப்படிவங்களும் விண்ணப்பிக்கும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்களும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படுவதுடன் அவ்விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பது பற்றி விண்ணப்பதாரியினால் கவனிக்க வேண்டியதுடன் அவ்வாறில்லாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

5. **பரீட்சார்த்தியின் ஆளடையாளங்கள்.**-பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தி அடையக்கூடியவாறு சுய அடையாளங்களை உறுதிப்படுத்த வேண்டும். இதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் எவையேனும் ஏற்றுக்கொள்ளப்படும்:-

(1) ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளரினால் வழங்கப் பட்ட தேசிய அடையாள அட்டை ;

(2) செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச் சீட்டு.

மேற்கூறப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்க முடியாத விண்ணப்ப தாரிகள் பரீட்சார்த்தி என்ற அந்தஸ்து தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

6. விண்ணப்பப்படிவத்தை ஏற்றுக்கொண்ட அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நேரசூசியின் பிரதியுடன் அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்களினால் பரீட்சை மண்டப பொறுப்பாளருக்கு அவரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு அனுமதி அட்டை இன்றி பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாக பத்திரிகை அறிவித்தல் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தலில் வெளியிடப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காத பட்சத்தில் அறிவித்தல் குறிப் பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தாங்கள் வைத்துக் கொண்ட விண்ணப்பப்படிவத்தின் உறுதி செய்யப்பட்ட நிழற்படப் பிரதி, பதிவு செய்த பற்றுச்சீட்டு கொழும்புக்கு வெளிப்பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்காக தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு தங்களது கோரிக்கைக் கடிதத்துடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பது மிக முக்கியமாகும்.

7. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதி அட்டை உள்ள உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களப் பொறுப்பாளரினால் கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணக் கொடுப்பனவுகள் செலுத்தப்படமாட்டாது.

8. தாம் கல்வி கற்கும் மொழி மூலம் அல்லது அரச மொழி மூலம் வினாப்பத்திரத்திற்கு பதிலளிக்க வேண்டும். தாம் விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது. பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடத்தப்படும்.

9. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

10. **பரீட்சை ஒழுங்கு விதிமுறைகள்:**

(மேற்கூறப்பட்ட பதவிகளுக்கு பரீட்சை கீழ்க்கூறப்பட்ட பாடங்களைக் கொண்டதாக அமையும்.) :-

| பாடம் | பாட இல. | புள்ளி | காலங் கள் |
|---|---|---|---|
| 1. தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்கு கோவை | 01 | 100 | 03 மணித்தியாலம் |
| 2. அபிவிருத்தி நிருவாகம் | 02 | 100 | 03 மணித்தியாலம் |

(1) முதலாம் வினாப்பத்திரம் (தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குக் கோவை) -

(I) தாபன விதிக்கோவையின் I, II, VI, XII வாசகங்கள்

(II) தாபன விதிக்கோவையின் இரண்டாம் பிரிவின் சகல வாசகங்களும்

(III) நிதி ஒழுங்குக் கோவை IV மற்றும் V வாசகங்கள்

(2) இரண்டாம் வினாப்பத்திரம் (அபிவிருத்தி நிருவாகம்) -

(I) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பும் அதன் பதின்மூன்றாவது திருத்தமும்.

(II) மாகாண சபை சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள்.

(III) அமைச்சின் ஒழுங்குக் கட்டமைப்பு மற்றும் அதன் பல்வகை மட்டங்களில் பொறுப்பளிக்கப்பட்டுள்ள கடமை விபரங்கள்.
(சித்திக்காக புள்ளிகளில் குறைந்த பட்சம் 40% ஐ பெற்றுக் கொள்ள வேண்டும்.)

11. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவ தானது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதை ஏற்றுக்கொண்டதாக கருதப்படமாட்டாது.

12. இப்பரீட்சையின் வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படாத விடயங்கள் தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

எம். எம். என். டி. பண்டார,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்லை.
2009.03.17.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய அரசாங்கத்தின் கீழ் தேசிய பாடசாலைகளுக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட முகாமைத்துவ உதவியாளர் பதவி வகிப்பவர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடை தாண்டற் பரீட்சை - 2009**

FIRST EFFICIENCY BAR EXAMINATION FOR MANAGEMENT ASSISTANTS RECRUITED FOR NATIONAL SCHOOLS UNDER THE CENTRAL GOVERNMENT - 2009

சுட்டெண் இல. : [ ]
(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
[ ]
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடுக.)

1.0 முதல் எழுத்தை இறுதியில் குறிப்பிட்டு விண்ணப்பதாரியின் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : -----.
உதாரணம் : SUNIL. J.M.U.

1.1 முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர்கள் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.

1.2 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

1.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2.0 சேவை இடம் மற்றும் முகவரி :-

2.1 கல்லூரியின் /கல்விக் கல்லூரியின்/ஆசிரிய கலாசாலை யின் /அலுவலகத்தின் பெயர் :-----.

2.2 அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்):----.

3. தற்போது வகிக்கும் பதவி :-----.
(நியமனக் கடிதத்தின் உறுதிசெய்யப்பட்ட பிரதியை இணைக்கவும்)

3.1 நியமனக் கடிதத்தின் இலக்கம் :-----.
3.2 நியமனத் திகதி :-----.

4. தாங்கள் தோற்றும் பாடம்/பாடங்கள் (வர்த்தமானி அறிவித்தலின் நான்காவது வாசகத்தைப் பார்க்கவும்)

| தொடர் இல. | பாடம் | பாட இல. |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |

மேற்கூறப்பட்ட விபரங்கள் சரியானது என்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்ற தகைமை இருப்பதுடன் இப்பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு கட்டுப்படுவதாகவும் இத்தால் உறுதிமொழிகிறேன்.

..........................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :-----.

**குறிப்பு**.- தமது திணைக்களப் பொறுப்பாளர் அல்லது திணைக்கள பொறுப்பாளருக்குப் பதிலாக கையொப்பமிட அதிகாரம் கொண்ட அலுவலருக்கு முன்னால் விண்ணப்பதாரி கையொப்பமிட வேண்டும்.

பற்றுச்சீட்டை கழறாது ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியை தங்களுடன் வைத்திருப்பது பயன்மிக்கது)

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

எனது அலுவலகத்தில்/கல்லூரியில்/கல்விக் கல்லூரியில்/ஆசிரிய கலாசாலையில் சேவையாற்றும் இவ் அலுவலரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிந்துள்ளதாகவும் திரு./திருமதி/செல்வி ...................... .......... என் முன்னிலையில் கையொப்பமிட்டதாகவும் உறுதி செய்கிறேன்.

....................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம் மற்றும்
பதவி முத்திரை (அதிபர்/பீடாதிபதி/
ஆசிரிய கல்லூரி அதிபர்/பதவி நிலை உத்தியோகத்தர்).

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.
திகதி :-----.

**திணைக்களத் தலைவரின் சான்றுரை**

1.மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை பரீட்சித்ததாகவும்.

2.நியமனக் கடிதத்தின் உறுதிசெய்யப்பட்ட பிரதி இணைக்கப்பட்ட தாகவும்

3.உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்ற தகைமை கொண்டவர் என்றும் இத்தால் சான்றுரைக்கிறேன்.

.............................
உறுதி செய்பவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.
(வலயக் கல்விப் பணிப்பாளர்/பீடாதிபதி /திணைக்களத் தலைவர்)

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.
திகதி :-----.

4-79

---

## கல்வி அமைச்சிற்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட அபிவிருத்தி உதவியாளர் மற்றும் திட்டமிடல்/நிதி உதவியாளர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடை தாண்டற் பரீட்சை - 2009

இப்பதவிக்குரிய உத்தியோகத்தர்களுக்காக உரிய அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு ஒழுங்கு விதிகளுக்கமைய வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் 2009, யூலை மாதம் நடத்தப்படும் என இத்தால் அறிவிக்கிறேன்.

2. (I) இப்பரீட்சை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக அவரினால் உத்தரவிடப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்பட வேண்டும் ;

(II) பரீட்சார்த்திகளுக்கு விதிக்கப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகள் வர்த்தமானி அறிவித்தலில் தனியாக அச்சிடப்பட்டுள்ளன. இச்சட்ட ஒழுங்குகளை மீறும் பட்சத்தில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனை களுக்கு உட்பட வேண்டியேற்படும் ;

(III) இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்க முடிவது கல்வி அமைச்சின் கீழ் நியமனம் பெற்ற சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் மாத்திரமாகும் ;

**3. பரீட்சைக் கட்டணம்**.-இவ்வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்காக முதற் தடவையாக தோற்றும் விண்ணப்பதாரர்களிட மிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது. அதற்குப் பின்னர் தோற்றுவதாயின் ரூ. 200 பரீட்சைக் கட்டணம் அறவிடப்படும். இப்பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 4000-20-03-20-13 இல் வைப்பிலிடக்கூடியவாறு நாட்டின் எந்த மாவட்ட/பிரதேச செயலகத்திலும் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழறாது ஒட்ட வேண்டும்.

(பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியை உங்களுடன் வைத்திருப்பது பயன்மிக்கது)

**4. விண்ணப்பப் படிவம்**.-விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக இருக்க வேண்டும். இம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய ஏ4 அளவு கடதாசியில் தயாரிக்கவேண்டியதுடன் தலைப்பு இலக்கம் 1-3 வரை முதலாம் பக்கத்திலும் எஞ்சியதை இரண்டாம் பக்கத்திலுமாக தயாரிக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தை தட்டச்சுப் பொறித்து தயாரிக்க முடியும் என்ற போதிலும் அதனை சரியாக தெளிவாக

விண்ணப்பதாரியின் கையெழுத்தினால் பூரணப்படுத்த வேண்டும். இதனடிப்படையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சார்த்தியினால் வலயக் கல்விப் பணிப்பாளர்/பீடாதிபதி/திணைக்களப் பொறுப்பாளரினால் 2009, ஏப்பிறல் 30 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "பத்தரமுல்லை, பெலவத்தை, பரீட்சை ஆணையாளர் நாயகம்" இற்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவங்களை அனுப்பும்போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் நியமனக் கடிதத்தின் உறுதிசெய்யப்பட்ட பிரதியை இணைக்க வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்களும் சரியான தகவல்களைக் குறிப்பிடாத விண்ணப்பப்படிவங்களும் விண்ணப்பிக்கும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்களும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படுவதுடன் அவ்விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பது பற்றி விண்ணப்பதாரியினால் கவனிக்க வேண்டியதுடன் அவ்வாறில்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

5. **பரீட்சார்த்தியின் ஆளடையாளங்கள்.**-பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தி அடையக்கூடியவாறு சுய அடையாளங்களை உறுதிப்படுத்த வேண்டும். இதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் எவையேனும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(2) செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச் சீட்டு.

மேற்கூறப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரிகள் பரீட்சார்த்தி என்ற அந்தஸ்து தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

6. விண்ணப்பப்படிவத்தை ஏற்றுக்கொண்ட அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நேரசூசியின் பிரதியுடன் அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்களினால் பரீட்சை மண்டப பொறுப்பாளருக்கு அவரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டை சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு அனுமதி அட்டை இன்றி பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாக பத்திரிகை அறிவித்தல் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காத பட்சத்தில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தாங்கள் வைத்துக் கொண்ட விண்ணப்பப்படிவத்தின் உறுதி செய்யப்பட்ட நிழற்படப் பிரதி, பதிவு செய்த பற்றுச்சீட்டு கொழும்புக்கு வெளிப்பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்காக தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு தங்களது கோரிக்கைக் கடிதத்துடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பது மிக முக்கியமாகும்.

7. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதி அட்டை உள்ள அலுவலர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களப் பொறுப்பாளரினால் கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணக் கொடுப்பனவுகள் செலுத்தப்படமாட்டாது.

8. தாம் கல்வி கற்கும் மொழி மூலம் அல்லது அரச மொழி மூலம் வினாப்பத்திரத்திற்கு பதிலளிக்க வேண்டும். தாம் விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது. பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடத்தப்படும்.

9. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

10. **பரீட்சை ஒழுங்கு விதிமுறைகள் :**

மேற்கூறப்பட்ட பதவிக்குரிய பரீட்சை கீழ்க்கூறப்பட்ட பாடங்களைக் கொண்டதாக அமையும்.:-

இப்பரீட்சைக்காக கீழ்க் குறிப்பிடப்பட்ட பாடங்களைக் கொண்ட ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் பதிலளிக்க வேண்டும் (காலம் 02 மணித்தியாலம்)

(I) பொது நிருவாகம் மற்றும் அலுவலக முகாமைத்துவம் :

தாபன விதிக் கோவையின் ஒழுங்கு விதிகள் மற்றும் அலுவலக முகாமைத்துவம் மற்றும் தாபன விதிக்கோவையின் I, II, V, VI, VII, VIII, XII, XIV, XV, XVI, XXIV, XXV, XXVII, XXVIII, XXX, XXXII வாசகங்கள் தொடர்பாக.

(II) நிதி ஒழுங்குக் கோவை மற்றும் கணக்குச் செயற்பாடுகள்:

(அ) அரச நிதி ஒழுங்குக் கோவையின் முதலாம் பகுதி (X ஆம் வாசகத்தைத் தவிர)

சித்திக்காக குறைந்த பட்சம் ஒவ்வொரு வினாப்பத்திரங் களிலும் 40% புள்ளிகளைப் பெற வேண்டும்.

11. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டையை வழங்கப்படுவதானது, அவர் பரீட்சைக்குத் தோற்றும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொண்டதாக கருதப்படமாட்டாது.

12. இப்பரீட்சையின் வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படாத விடயங்கள் தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

எம். எம். என். டீ. பண்டார,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்லை.
2009.03.18.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சிற்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட அபிவிருத்தி உதவியாளர் மற்றும் திட்டமிடல்/நிதி உதவியாளர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடை தாண்டற் பரீட்சை - 2009**

FIRST EFFICIENCY BAR EXAMINATION FOR OFFICERS BELONGING TO POSTS OF DEVELOPMENT ASSISTANT AND PLANNING/ FINANCIAL ASSISTANT RECRUITED UNDER THE MINISTRY OF EDUCATION - 2009

பரீட்சை இல. : [ ]
(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சார்த்தி தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 [ ]

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடுக.)

1.0 முதல் எழுத்தை இறுதியில் குறிப்பிட்டு விண்ணப்பதாரியின் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.
உதாரணம் SUNIL, J.M.U.

1.1 முதலெழுத்துக்களினால் குறித்துக் காட்டும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.
1.2 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

1.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2.0 சேவை இடம் மற்றும் முகவரி :-

2.1 கல்லூரியின் /கல்விக் கல்லூரியின்/ஆசிரிய கலாசாலையின் /அலுவலகத்தின் பெயர் :-----.

2.2 கடமை முகவரி (ஆங்கில கெபிட்டல் எழுத்தில்) :-----.

3.0 தற்போது வகிக்கும் பதவி :-----.
(நியமனக் கடிதத்தின் உறுதிசெய்யப்பட்ட பிரதியை இணைக்கவும்)

3.1 நியமனக் கடிதத்தின் இலக்கம் :-----.
3.2 நியமனத் திகதி :-----.

மேற்கூறப்பட்ட விபரங்கள் சரியானது என்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்ற தகைமை இருப்பதுடன் இப்பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு கட்டுப்படுவதாகவும் இத்தால் உறுதிமொழிகிறேன்.

..........................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :-----.

**குறிப்பு**.- தமது திணைக்களப் பொறுப்பாளர் அல்லது திணைக்கள பொறுப்பாளருக்குப் பதிலாக கையொப்பமிட அதிகாரம் கொண்ட உத்தியோகத்தருக்கு முன்னால் விண்ணப்பதாரி கையொப்பமிட வேண்டும்.

பற்றுச்சீட்டை கழறாது ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியை தங்களுடன் வைத்திருப்பது பயன்மிக்கது)

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

எனது அலுவலகத்தில்/கல்லூரியில்/கல்விக் கல்லூரியில் ஆசிரிய கலாசாலையில் சேவையாற்றும் இவ் அலுவலரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிந்துள்ளதாகவும் திரு./ திருமதி/ செல்வி ................................. என் முன்னிலையில் கையொப்பமிட்டதாகவம் உறுதி செய்கிறேன்.

...................................
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை (அதிபர்/பீடாதிபதி/ ஆசிரிய கல்லூரி அதிபர்/பதவி நிலை அலுவலர்).

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.
திகதி :-----.

**திணைக்களத் தலைவரின் சான்றுரை**

1.மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை பரீட்சித்ததாகவும்.

2.நியமனக் கடிதத்தின் உறுதிசெய்யப்பட்ட பிரதி இணைக்கப்பட்டதாகவும் ;

3.உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்ற தகைமை கொண்டவர் என்றும், இத்தால் உறுதிசெய்கிறேன்.

.............................
சான்றுரைப்பவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.
(வலயக் கல்விப் பணிப்பாளர்/பீடாதிபதி, /திணைக்களத் தலைவர்)

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.
திகதி :-----.

4-80

---

## திருத்தம்

**சுகாதாரத் திணைக்களம்**

இலங்கை விஞ்ஞான சேவையில் வகுப்பு II தரம் II இற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை - 2007 (2009)

மேற்படி பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2009.03.06 ஆந் திகதி வெளியிடப்பட்டிருந்த அரசாங்க வர்த்தமானி அறிவிப்பு இலக்கம் 1592 இல் காட்டியுள்ள விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2009.04.24 ஆந் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. அதில் பந்தி 07 இல் பரீட்சைக் கட்டணத்தின் கீழ் காட்டப்பட்டுள்ள 'வருமானத் தலைப்பு 6, உப தலைப்பு 1, விடயம் 4, உப விடயம் 4 இற்கு வரவு வைத்தல் வேண்டும்' என்பது கீழ் குறிப்பிட்டுள்ளவாறு திருத்தம் செய்யப்படுகிறது:-

வருமான தலைப்பு 4000-20-03-20-13 இற்கு வரவு வைப்பதற்கு செலுத்தல் வேண்டும்.

(கலாநிதி) சரத் எல். பி. அமுனுகம,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2009.03.18.

4-118

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

தொழில்சார், தொழில் நுட்பப் பயிற்சி அமைச்சு

### தொழில் நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம்

### இலங்கைத் தொழில் நுட்பக் கல்விச் சேவையின் III ஆம் வகுப்பின் (விசேட ஆளணி) விரிவுரையாளர் பதவிகள்

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் தொழில்நுட்பவியல் கல்லூரிகளுக்கு இலங்கைத் தொழில் நுட்பக் கல்விச் சேவையின் III ஆம் வகுப்பின் (விசேட ஆளணி) கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள விரிவுரையாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:-

| பதவி தொடர் இல. | பதவி | கற்பித்தல் மொழி | வெற்றிடங்கள் (ஆங்கில மொழி மூலம்) |
|---|---|---|---|
| 1. | குடிசார் எந்திரவியல் விரிவுரையாளர் | ஆங்கிலம் | 12 |
| 2. | மின்னியல் எந்திரவியல் விரிவுரையாளர் | ஆங்கிலம் | 02 |
| 3. | இலத்திரனியல் எந்திரவியல் விரிவுரையாளர் | ஆங்கிலம் | 02 |
| 4. | குளிரூட்டல் மற்றும் வளிச்சீராக்கல் விரிவுரையாளர் | ஆங்கிலம் | 08 |
| 5. | உணவுத் தொழினுட்பவியல் விரிவுரையாளர் | ஆங்கிலம் | 06 |
| 6. | பொறியியல் எந்திரவியல் (தன்னியக்க) விரிவுரையாளர் | ஆங்கிலம் | 12 |
| 7. | பொறியியல் எந்திரவியல் (உருகி ஒட்டல்) விரிவுரையாளர் | ஆங்கிலம் | 12 |
| 8. | தகவல் தொழினுட்பவியல் விரிவுரையாளர் | ஆங்கிலம் | 14 |
| 9. | அச்சிடும் தொழினுட்பவியல் விரிவுரையாளர் | ஆங்கிலம் | 04 |
| 10. | ஆபரண விரிவுரையாளர் | ஆங்கிலம் | 08 |
| 11. | பொறியியல் எந்திரவியல் (பொறி இலத்திரனியல்) விரிவுரையாளர் | ஆங்கிலம் | 08 |
| 12. | உற்பத்தித் தொழினுட்பவியல் விரிவுரையாளர் | ஆங்கிலம் | 04 |
| 13. | உயிர் மருத்துவ தொழினுட்பவியல் விரிவுரையாளர் | ஆங்கிலம் | 04 |

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் 2009, ஏப்பிறல் 30 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் "பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்வி பயிற்சி திணைக்களம், த. பெ. இல. 557, கொழும்பு 10" எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கைத் தொழில்நுட்பக் கல்விச் சேவை (விசேட ஆளணி) III ஆம் வகுப்புப் பதவி" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் உமது தெரிவு ஒழுங்கின்படி ஒவ்வொரு பதவிக்கும் பதவி தொடர் இலக்கத்தையும் பதவியின் பெயரையும் அவ்விண்ணப்பத்தில் குறிப்பிடல் வேண்டும். வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகுதிகள் இருக்கும் விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

2. **சேவை நிபந்தனைகளும் நியமன நியதிகளும்.**- (அ) இப்பதவிகள் நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் விதவைகள் மற்றும் அநாதைகள்/ தபுதாரர் மற்றும் அநாதைகள் இளைப்பாற்று நிதியத்திற்கு உதவுத் தொகைகள் செலுத்துமாறு வேண்டப்படுவர். தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்தி அரச சேவையில் முதலில் மூன்று வருடத்திற்கு தகுதிகாண் தேர்வாய்ப்புக்குரிய நிலையில் நியமிக்கப்படுவர்.

**வினைத்திறமை காண் தடை.**- (ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கை 20/2001 க்கு அமைய பதவியொன்றுக்கு நியமனம் செய்யப்படும் ஒவ்வொரு உத்தியோகத்தரும் தமது சம்பளம் படிநிலையின் 4 வது படிநிலையை பெறமுன்னர் 1 வது வினைத்திறமை காண் தடையினையும் 7 வது படிநிலையைப் பெறமுன்னர் 2 வது வினைத்திறமைகாண் தடையினையும் பூரணப்படுத்த வேண்டும். குறிப்பிட்ட கால எல்லைக்குள் வினைத்திறமை காண் தடையைப் பூர்த்தி செய்யாதவர்களது வருடாந்த சம்பள உயர்வு தடுத்து வைக்கப்படுவதுடன் வழங்கப்பட்ட கால வரம்பிற்கு மேலதிகமாக எடுக்கப்பட்ட கால எல்லையெனக் கணிக்கப்படும். இவ் உத்தியோகத்தர்கள் தகுதிகாண் தடையைப் பூர்த்தி செய்யும் வரை தொழில் நுட்பக் கல்விச் சேவையில் எந்த ஒரு உயர்பதவிக்கும் விண்ணப்பிப்பதற்கு தகுதியற்றவராவார்.

(இ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்விச் சேவை (விசேட ஆளணி) III ஆம் வகுப்பில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள், நியமனத் திகதியிலிருந்து ஐந்து வருடத்திற்குள் இரண்டாம் மொழியில் தேர்ச்சி பெற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர். இது பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 7/2007 இற்கு ஒழுங்கமைவானது. உரிய காலத்திற்குள் தேர்ச்சி பெறத் தவறினால் சம்பள ஏற்றம் பிற்போடுவதற்கேதுவாகலாம்.

மொழி தேர்ச்சி பெறவேண்டிய உத்தியோகத்தர்கள், க.பொ.த. (சா.த.) இல் பிரதான பாடமாக (1 ஆம் மொழி வரிசையில்) கொண்ட சிங்களம்/தமிழ் மொழியை இரண்டாவது மொழித் தேர்ச்சிக்காக சித்தி பெறல் வேண்டும். (விருப்புத் தேர்வுக்குரிய பாடம் அல்லது 2 ஆவது மொழி, இத்தேர்வில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) அத்துடன் அரச கரும மொழித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சை அல்லது விசேட திறன் பரீட்சை ஒன்றில் சித்தி பெறல் வேண்டும்.

3. **வேதனங்களும் கொடுப்பனவுகளும்.**- மேற்படி பதவிக்குரிய மாதாந்த திரட்டிய சம்பள அளவுத் திட்டம்: (SL- 1 -2006) ரூபா 22,935 - 10 × 645 - 8 × 790 - 17 × 1,050 -ரூபா 53,555. பொது நிர்வாகச் சுற்றறிக்கை 06/2006 இன்படி சம்பளம் வழங்கப்படும். சம்பள ஏற்றக் கொடுப்பனவு மேலே 2 (ஆ) ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு வினைத்திறமைகாண் தடையில் சித்தியடைவதற்கு உட்பட்டதாகும்.

4. **தேவையான தகைமைகள்** .-ஒவ்வொரு விண்ணப்பதாரியும் கீழ்க்காணும் தகைமைகளை விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொண்டுள்ளார் என்பதை நிரூபிக்கும் சான்றுகளை சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்பம் முடிவடையும் திகதியில் 22 வயதிற்குக் குறையாதவராயும் 35 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும் ;

(இ) மெச்சத்தகு பண்புகளும் தேகாரோக்கியமும் உடையவராய் இருத்தல் வேண்டும் ;

(ஈ) இலங்கையின் எப்பாகத்திலும் தொழில்புரியக் கூடியவராக இருத்தல் வேண்டும் ;

(உ) கல்வி:
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் உரிய துறையில் பட்டம் பெற்றிருத்தல்.

அத்துடன்

பட்டப்படிப்பின் பின் 05 வருட கற்பித்தல் / செயன்முறை அனுபவம்.

5. **ஆட்சேர்ப்பு வழிமுறை**.- தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள தொழில் நுட்பவியல் கல்லூரிகளில் இலங்கைத் தொழில் நுட்ப கல்வி சேவையினுடைய விரிவுரையாளர் வகுப்பு III க்குரிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் மூலம் விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவார்கள். தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்கள குறிப்புரைக்கு அமைவாக நியமனக் வழங்குனருக்குப் பதிலாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இப்பரீட்சை நடாத்தப்படும்.

6. உம்மால் உறுதிசெய்யப்பட்ட கீழ்வரும் பிரதிகள் இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும் :-

(i) பிறப்பு சான்றிதழ் (**மு.கு** : சமய தீட்சை சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்படும் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)

(ii) பட்டதாரிச் சான்றிதழ்கள் அல்லது கல்விச் சான்றிதழ்கள் ;

(iii) தொழில் வல்லுநர் தகைமை, அத்துடன்/அல்லது தொழில்நுட்ப தகைமைச் சான்றிதழ்கள் ;

(iv) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றால் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சை சான்றிதழ்கள்.

7. அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் உரிய விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

8. இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இன் ஆரம்பத்தில் பிரசுரமாகும் அரசாங்க சேவை பதவிகளுக்கு மேற்கொள்ளும் நியமனங்கள் தொடர்பில் ஏற்புடைத்தான பொது நிபந்தனைகளுக்கும் மற்றும் 1986.08.15 ஆந் திகதி 415 ஆம் இலக்க பகுதி I வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவைப் பிரமாணக் குறிப்புகளும், உமது கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

9. சகல விண்ணப்பதாரிகளும் கீழ்வரும் பகுதிகளை கொண்ட பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்படுகின்ற திறந்த போட்டிப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.

(i) பொது அறிவு (பரீட்சை காலம் : 01 மணித்தியாலம்) - புள்ளிகள் 100

(ii) பொது உளசார்பு (பரீட்சை காலம் : 01 மணித்தியாலம்) - புள்ளிகள் 100

9.1 திறந்த போட்டிப் பரீட்சையில் திறமை ஒழுங்கில் தகுதி பெற்ற பரீட்சார்த்திகள் வர்த்தமானி ஆட்சேர்ப்பு விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகுதிகளை உறுதிசெய்வதற்கு நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும். (நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது).

முன்னுரிமைப் பட்டியலின் அடிப்படையில் சேர்ப்பதற்கு தேவையான மொத்தப் புள்ளிகளைப் பெற்றிருப்பதுடன் ஒவ்வொரு பாட பரீட்சையிலும் 40% அதற்கு மேல் பெற்றிருத்தல் வேண்டும்.

**பாடத்திட்டம்** :

10.1 பொது அறிவு (1 மணித்தியாலம்).-தேசிய, சர்வதேச மட்டத்தில் காணப்படும் பொருளியல், சமூக, அரசியல், புவியியல் மற்றும் விஞ்ஞானம் தொடர்பான அறிவினை பரீட்சார்த்திகளிடம் மதிப்பிடும் வகையில் இவ் வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். அத்துடன் இவ்வினாப்பத்திரத்தில் சில வினாக்கள் நேரடியாக பரீட்சார்த்திகளிடம் முன்வைக்கப்பட்டு அவற்றிற்கு சரியான விடை எதிர்பார்க்கப்படும் விதத்திலும் வேறு சில வினாக்கள் பரீட்சார்த்திகளிடம் முன் வைக்கப்பட்டு அதில் மிக சரியான விடையை தேர்ந்தெடுக்கும் திறனை அறியும் விதத்திலும் வினாப்பத்திரம் தயாரிக்கப்படும்.

10.2 பொது உளச்சார்பு (1 மணித்தியாலம்) .-ஒரு மணித்தியாலத்திற்கு வரையறுக்கப்பட்ட இவ்வினாப்பத்திரம் பரீட்சார்த்திகளின் தர்க்க ரீதியான சிந்தனை, அவர்களின் தீர்மானம் எடுக்கும் திறன் என்பவற்றை மதிப்பீடு செய்யும் வகையில் தயாரிக்கப்படும். இவ்வினாப்பத்திரம் பல் தேர்வு வினாக்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும்.

11. **பரீட்சைத் திகதி**.- 2009 ஆம் ஆண்டு யூன் மாதம் முதல்கிழமை கொழும்பு நகரத்திலும் (நகர இல. 01) யாழ்ப்பாண நகரத்திலும் (நகர இல. 02) பரீட்சை நடைபெறும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்படும் அறிவித்தலின்படி பரீட்சையைத் தள்ளிபோடுவதற்கும் நிறுத்துவதற்கும் செயலாளருக்கும் உரிமை உண்டு. மேற்கூறிய நகரங்களை பரீட்சார்த்திகள் தெரிவு செய்யலாம். தெரிவு செய்த பின்பு எக்காரணம் கொண்டும் பரீட்சை நகரங்கள் மாற்றப்படமாட்டாது.

12. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 300 ஆகும். பரீட்சைக்கட்டணமானது. முடிவுத் திகதிக்கு முன்பு ஏதாவது மக்கள் வங்கிக் கிளையில் ''பணிப்பாளர் நாயகம், தொழில் நுட்பக்கல்வி பயிற்சித் திணைக்களம் என்ற பெயரில் 176-1001-39026228 என்னும் (மிட் சிற்றி கிளையின்) கணக்கு இலக்கத்தில்'' வைப்பிலிடவும். மக்கள் வங்கி பற்றுச்சீட்டை (ரசீதை) விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட பகுதியில் ஒட்டவும். இப்பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் பிரதியை பயன்படுத்துவதற்காக பரீட்சார்த்திகள் வைத்திருக்கவும்.

13. திறந்த போட்டிப் பரீட்சையில் பெற்ற உயர் புள்ளிகளின் அடிப்படையில் விண்ணப்பதாரிகளின் நியமனங்கள் நிரப்பப்படும்.

14. வெற்றிடங்களின் ஒரு பகுதியையோ அல்லது முழுவதையுமோ நிரப்பாமல் விடும் உரிமை பொதுச் சேவைகள் ஆணைக்குழுவிற்கு உரியதாகும்.

15. இப் பதவிகளுக்கு தாபனக் கோவை சட்டத்தின் II வது அத்தியாயத்தின் 10-12 ஆம் பிரிவுகளில் குறிப்பிட்ட நியதிகள் ஏற்புடைத்தாகும்.

பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

திலக் ஹபன்கம,
செயலாளர்,
தொழில்சார், தொழில் நுட்பப் பயிற்சி அமைச்சு.

தொழில்சார் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அமைச்சு,
எல்விற்றிகல மாவத்தை,
கொழும்பு 05.
2009.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொழில்சார் மற்றும் தொழில் நுட்பப் பயிற்சி அமைச்சு**

*தொழில் நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களத்தின் கீழ் இலங்கைத் தொழில் நுட்பக் கல்விச் சேவையின் III ஆம் வகுப்பின் (விசேட ஆளணி) விரிவுரையாளர் பதவிகள்*

.................................. விரிவுரையாளர் பதவி

| பதவிநாமம் தொடர் இல. | பதவி |
|---|---|
| (i) | .................................................................... |
| (ii) | .................................................................... |
| (iii) | .................................................................... |

1.0 மொழி மூலம் : பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் -2
தமிழ் -3
ஆங்கிலம் -4

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

2.0 நகரம் :-
பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரம் :-----.
நகர இலக்கம் :-
(வர்த்தமானி அறிவித்தலின் பந்தி இலக்கம் 11 இன் படி) (நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது)

1. முதல் எழுத்துக்களுடன் பெயர் : (திரு/திருமதி/செல்வி) :-

2. முழுப் பெயர் :-

3. அலுவலக முகவரி :-

4. சொந்த முகவரி :-
(அனுமதி அட்டை கிடைக்க வேண்டிய முகவரி)

5. (அ) இலங்கைப் பிரஜையா? :-

(ஆ) அப்படியாயின் வம்சாவழியினாலா? பதிவிலானதா? :----.

6. (அ) பிறந்த திகதி :
ஆண்டு : மாதம் : திகதி :

(ஆ) தேசிய அடையாள அட்டை இல. :-

7. விண்ணப்பம் முடிவடையும் திகதியில் வயது :-
வருடங்கள் : மாதங்கள் : நாட்கள்:

8. விவாகமானவரா? அல்லது தனியாளா? :-----.

9. தற்போது வகிக்கும் பதவி தொடர்பான விபரங்கள் :-

(அ) பதவியும் நியமனத் திகதியும் :-----.
(ஆ) பதவி நிரந்தரமானதா ? தற்காலிகமானதா? :-----.
(இ) ஓய்வூதிய உரித்துடையதா ? ஓய்வூதிய உரித்தற்றதா? :---.
(ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீரா ? :-----.
(உ) திணைக்களம் :-----.
(ஊ) நிறுவனம் /பணிபுரியும் இடம் :-----.
(எ) வருடாந்த திரட்டிய சம்பள அளவுத் திட்டம் :-----.
(ஏ) தற்போது கிடைக்கப்பெறும் வருடாந்த திரட்டிய சம்பளம் :-----.

10. கல்வித் தகைமைகள் தொடர்பான விபரங்கள் (சிங்களம்/ தமிழ் மொழியில் தேர்ச்சி தொடர்பான சான்றிதழ் உட்பட)

| பரீட்சை | வருடம் | பாடங்கள் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

11. தொழிற் தகைமைகள் தொடர்பான விபரங்கள்:

| சான்றிதழ் | சான்றிதழ் வழங்கப் பட்ட நிறுவனம் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

12. பொது கல்வி பயின்ற நிறுவனம் :

| நிறுவனம் | தரம் | இருந்து | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |

13. தொழிற்கல்வி பயின்ற நிறுவனம் :

| நிறுவனம் | கற்கை நெறி | இருந்து | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |

14. முன்னைய பதவிகள் (சரியான திகதிகளுடன் காலவரன் ஒழுங்கில் குறிப்பிடவும்) :-

| திணைக் களம் | நிறுவனம்/ வேலை செய்த இடம் | பதவி | பதவி நிரந்தர மானதா/அல்லது தற்காலிகமானதா? | இருந்து | வரை |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |
| 2. | | | | | |
| 3. | | | | | |
| 4. | | | | | |

15. உமக்கு எதிராக சட்ட நீதிமன்றத்தில் யாதேனும் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதா? அவ்வாறாயின் விபரங்களைத் தருக :----.

16. அரசாங்கத் திணைக்களம் ஒன்றில் அல்லது சபை /கூட்டுத்தாபனம் ஒன்றில் இதற்கு முன் சேவையாற்றி இருப்பின் அச்சேவையிலிருந்து விலகியதன் காரணம் :-----.

17. உமக்கு எதிராக ஏதேனும் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டதா? அவ்வாறாயின் விபரங்களைத் தருக :-----.

| |
|---|
| (பற்றுச்சீட்டு/ரசீது ஒட்டப்பட வேண்டிய இடம்) |

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் உறுதி கூறுகின்றேன்.

இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனத் தெரிவு செய்யப்பட்டதன் பின்பு கண்டுபிடிக்கப்பட்டால் எந்த வித நட்ட ஈடுமின்றி பதவியிலிருந்து விலக்கப்படுவதற்குப் பாத்திரமாவேன் எனவும் நான் நன்கு அறிவேன்.

..........................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**திணைக்களத் தலைவரின் விதப்புரை**

.......................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :-----.

4-119

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2009 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத் திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5*** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* ***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.*** *- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்*** *என்பதையும்,* ***அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது*** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

**அட்டவணை - 2009**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஏப்பிறல்** | .. | வெள்ளி | 03.04.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.03.2008 |
| | | புதன் | 08.04.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.03.2009 |
| | | வெள்ளி | 17.04.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.04.2009 |
| | | வெள்ளி | 24.04.2009 | .. | நண்பகல் 12 | புதன் | 08.04.2009 |
| | | வியாழன் | 30.04.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.04.2009 |
| **மே** | .. | வியாழன் | 07.05.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.04.2009 |
| | | வெள்ளி | 15.05.2009 | .. | நண்பகல் 12 | வியாழன் | 30.04.2009 |
| | | வெள்ளி | 22.05.2009 | .. | நண்பகல் 12 | வியாழன் | 07.05.2009 |
| | | வெள்ளி | 29.05.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.05.2009 |
| **யூன்** | .. | வெள்ளி | 05.06.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.05.2009 |
| | | வெள்ளி | 12.06.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.05.2009 |
| | | வெள்ளி | 19.06.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.06.2009 |
| | | வெள்ளி | 26.06.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.06.2009 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.